23.06.2026

**C. C. No. 368/2015**

**அ.சா. 9 – திரு.வெங்கடேஷ்பாபு.**

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு 4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடங்கப்பட்ட நேரம்:**

எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியும். நான் 2010 முதல் 2013 வரை மதுரை மாவட்டம், சின்னமனூர் கிளை மத்திய கூட்டுறவு கிளையில் நகை மதிப்பீட்டாளராக பணியில் இருந்தேன். பொதுவாக நகை அடமானத்திற்கு வரும்பொழுது நான் மதிப்பீடு செய்த பின்னர் வங்கியில் அடமானம் பெற்றுக்கொள்வார்கள் என்றால் சரிதான். ஆனால், பொதுவாக மொத்த நகையையும் உரசி பார்த்தால் வாடிக்கையார்கள் தங்கள்து தங்கம் குறைந்துவிடும் என்று தெரிவிப்பார்கள் என்பதால் ஒரு செயினின் இருமுனைகளை கோர்க்கும் பகுதியான குண்டு கொக்கி பகுதி மட்டும்தான் உரசி பார்ப்போம். இந்த வழக்கின் நகைகளை நான் உரசி பார்த்தபோது அந்த நகையின் உண்மை தன்மை தெரிய வந்ததா என்றால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட நகையை பொறுத்தவரை நான் உரசி பார்த்து மதிப்பீடு செய்யவில்லை. பொதுவாக தணிக்கையின்போது நகை போலீயானது என்று கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட நபருக்கு தபால் மூலம் நகையை திருப்பிக்கொள்ளுமாறு தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் அவ்வாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. இந்த எதிரிகள் இதேபோல் நான் பணியாற்றும் மத்திய கூட்டுறவு வங்கி, தாய்கோ வங்கி, ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி ஆகிய வங்கிகளில் இதேபோல் நகையின் தரத்தை ஆய்வு செய்யும் சில பகுதியை மட்டும் தங்கத்தை வைத்துக்கொண்டு பிற பாகங்கள் போலீ நகையாக அடமானம் வைப்பதை தொழிலாக கொண்டுள்ளார்கள். வைரபாண்டி என்பவர் பட்டறை வைத்துள்ளார். அதனால் மிக நுணுக்கமாக போலீ நகைகளில் சில பகுதியை மட்டும் தங்கமாக வைத்து பணம் பெறுவது இவர்களது



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.06.23 15:17:40 +0530

தொழிலாகும். இது பொறுத்துதான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நகை போலீயானது என்று தெரிந்த பின்னர் அந்த நகை முருகேஸ்வரியிடம் திரும்ப கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. காவல் துறையில் எப்பொழுது எனது வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் குறிப்பிட்டு தேதி எனக்கு ஞாபகமில்லை. போலீசார் விசாரணைக்கு வரவழைக்கும்பொழுது எனக்கு அழைப்பாணை கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அழைப்பாணை தற்பொழுது என்னிடம் இல்லை. எனது வாக்குமூலத்தை போலீசார் நான் சொல்ல சொல்ல பதிவு செய்தார்கள். அதை கையால் எழுதினார்களா தட்டச்சு செய்தார்களா என்று ஞாபகமில்லை. இவ்வழக்கில் எதிரி வைரபாண்டியனுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முழுக்க முழுக்க அனுபவித்த உண்மைகளைதான் சொல்லியுள்ளேன்.

மறுவிசாரணை – இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.23 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.06.23 15:17:44 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:23.06.2026